16.8.2019

அசல் வழக்கு எண்:385-2010

பி வா.சா. செல்லம் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் தம்பி மனைவி பெயர் அருவகம் என்றால் சரிதான். என் சகோதரர் இந்த வழக்கில் தரப்பினர் என்றால் சரிதான். அருவகம் இவ்வழக்கு வாதியின் பெரியப்பா மகள் என்றால் அது பற்றி தெரியாது அருவகம் தந்தை பெயர் பற்றி தெரியாது. அருவகத்துடன் பிறந்தவர்கள் யார் என்று தெரியாது 3ம் பிரதிவாதியுடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை. அருவகம் என்பவர் தாவா சொத்தில் பாகம் உள்ளதாக அறிவிப்பு அனுப்பினார் என்றும் வாதி மேற்படி அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்குத் தெரியாது. வாதியின் சித்தப்பா மகள் ஆண்டிச்சியும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும் அதற்கு வாதி பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்று எனக்குத் தெரியாது. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்குத் தெரியாது. முனியாண்டியும் செல்லமும் எந்த வருடம் வாய்கராலாக பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. 2.3.2010ம் தேதி ஒரு கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 1950ம் ஆண்டிலேயே கிரையம் செய்து கொடுக்கப்பட்ட நிலையி7ல் 2.3.2010ம் தேதி ஒரு கிரைய பத்திரம் எழுதிகொடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. 2.3.2010ம் தேதி கிரையம் கொடுப்பதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் 1950ம் அண்டிலிருந்தே வாதியின் முன் பாத்தியஸ்தர் அனுபவம் செய்து வந்து அதற்கு பின்னர் வாதி அனுவம் செய்துவருகிறார் என்றும் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கிரைய ஆவணம் எழுதிகொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்திற்கு யார் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளதோ அவரிடம் வரி வசூலிக்கப்படும் என்றால் சரிதான். செல்லம் பெயரிலான பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள கிஸ்தி ரசீதுகள் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் தற்போது வரை பட்டா வாதி பெயரில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் 52 செண்டு ஆகும். 13 செண்டை பொறுத்து 2001ல் சாலை கிரையம் பெற்று அவரது பெயரில் தனியாக பட்டா ஏற்பட்டு அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட 52 செண்டு சொத்தின் ச.எண்.192 ஆகும். வாதி ச.எண்.192க்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல வழக்கு தாக்கல் செய்துள்ளார் ச.எண்.192க்கு எங்கள் பெயரில் பட்டா உள்ளது. நான் பொய்யாக எதிர் வாதம் செய்த வருகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை